செ.வெ.எண்: 26 நாள்: 08.01.2022

**கரூர் மாவட்டம்**

கொரோனா தொற்று பரவல் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் தேதி குறிப்பிடாமல் தற்காலிகமாக ஒத்தி வைக்கப்படுகிறது - மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.த.பிரபுசங்கர், இ.ஆ.ப., அவர்கள் அறிவிப்பு

---------------------------------------------

கொரோனா தொற்றுப் பரவலை தடுப்பதற்காக தமிழக அரசின் உத்தரவின்படி பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

அதன் ஒரு பகுதியாக திங்கட்கிழமை தோறும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடத்தப்பட்டு வந்த மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், மாதந்தோறும் நடத்தப்படும் விவசாயிகள் குறைதீர்க்கும்நாள் கூட்டம் உள்ளிட்ட பொதுமக்கள் அதிகம் கூடும் வகையிலானயான கூட்டங்கள் அனைத்தும் அரசின் உத்தரவுப்படி தற்காலிகமாக மறு தேதி குறிப்பிடாமல் ஒத்தி வைக்கப்படுகிறது .

கொரோனா தொற்றுப் பரவலால் ஏற்பட்டுள்ள நிலைமையின் தீவிரத்தை உணர்ந்து பொதுமக்கள் தயவு செய்து வீட்டை விட்டு வெளியில் வரும்போது முகக்கவசம் அணிந்து வர வேண்டும், பொது இடங்களில் சமூக இடைவெளியை முறையாக கடைபிடிக்க வேண்டும் . அடிக்கடி சோப்பு போட்டு கைகழுவ வேண்டும். தமிழக அரசு வெளியிட்டுள்ள அனைத்து வழிகாட்டு நெறிமுறைகளையும் முறையாக பின்பற்ற வேண்டும்.

இவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.**